அதே பிரச்சினையை எதற்குப் பேசுகின்றீர்கள்? வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுவதாக இருந்தால் நான் வாய்ப்புத் தருகின்றேன், பேசுங்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) அந்த விதியை மீறி பேசிய வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சம்பந்தமாக பிரதான எதிர்க்கட்சி கேட்டபோது, நிராகரித்துவிட்டு, என்னுடைய தீர்ப்பை வழங்கிவிட்டேன். அதே தீர்ப்பு உங்களுக்கும் பொருந்தும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். அதை விடுங்கள், உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) சென்னை, பெசன்ட் நகர், ஓடைமாநகர் பகுதியில் தீ விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர்.

திரு. வாகை சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதி, பெசன்ட் நகர், ஓடைமாநகர் பகுதி மீனவர்கள் வாழும் பகுதியாகும். அந்தப் பகுதியிலே செவ்வாய்க்கிழமை இரவு 12 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டு, 50 வீடுகள் கிட்டத்தட்ட 88 குடும்பங்கள் உடைமைகளை இழந்து தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு முக்கியக் காரணம், கடற்கரைச் சாலை பழுது பார்க்காமல் அப்படியே விடப்பட்டிருப்பதால், அங்கே தீயணைப்பு வண்டி செல்ல முடியாமல், வெளியில் நின்றுவிட்ட காரணத்தினால் மிகப் பெரிய

2016 ஆகஸ்ட் 4] [திரு. வாகை சந்திரசேகர்]

பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அந்தப் பாதிப்பில் மாணவர்களுடைய certificates, ration cards, passports, பணம் என அனைத்தும் கரியாகிவிட்டன. உடுத்திய உடையோடு அந்தப் பகுதி பெண்களெல்லாம் கைக்குழந்தைகளை வைத்துக்கொண்டு, கண்ணீர் மல்க அங்கே இருக்கின்றார்கள். அத்தனை உடைமைகளும் போய்விட்டன. ஆகவே, உடனடியாக ration cards உள்ளிட்டவை வழங்கப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல், அந்தச் சாலைதான் அங்கு ஒரு முக்கியப் பிரச்சினை. அந்தக் கடற்கரையோரச் சாலையைச் செப்பனிட வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் விளக்கமாகப் பேச வேண்டாம், கவனத்தை ஈர்க்கின்றேன் என்று சொல்லி அமருங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்வார்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே மக்களுக்கு ஒரு துயரம் என்றால், உடனடியாக அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற ஒரே தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டம், பெசன்ட் நகரில் உள்ள அன்னை வேளாங்கண்ணி தெருவில் செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் திருமதி ஆனந்தி சிவா என்பவருடைய வீட்டு மாடியில் வட நாட்டைச் சேர்ந்த 6 நபர்கள் தங்கியிருந்த குடிசை வீட்டில் தீ ஏற்பட்டு, அருகில் இருந்த குடிசை வீட்டிற்கும் தீ பரவியது. அந்த வீட்டில் இருந்த சிலிண்டர் வெடித்ததாலும், அதன் அருகில் இருந்த இரண்டு வீடுகளில் சிலிண்டர் வெடித்ததாலும், காற்று வடக்கு நோக்கி பலமாக வீசியதாலும், ஏற்பட்ட தீ விபத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட 50 என்று சொன்னார்கள், 80 குடிசைகள் அங்கே தீக்கிரையாகின. இருந்தபோதும் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன், மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த உடனடி நடவடிக்கைகளின் காரணமாக இவ்வளவு பெரிய தீ விபத்தில் ஓர் உயிரிழப்புக்கூட ஏற்படாமல் தடுத்திருக்கின்றார்கள். மக்கள் எல்லாம் சாலையிலே தவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக அந்த

நிலை இல்லை. அனைவரும் உடனடியாகப் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டு, காலை, மதியம், இரவு என்று மூன்று வேளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் உணவு வழங்கி, உடை வழங்கி, பாய், தலையணை என்று அனைத்தையும் வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களையும் என்னையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக அங்கே அனுப்பி வைத்து, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து முழுவதுமாகச் சேதம் அடைந்த வீடுகளுக்கு உடனடியாக 5 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டது. 80 குடும்பங்களுக்கும் 10 கிலோ அரிசி, (மேசையைத் தட்டும் ஒலி) வேட்டி, சேலை போன்ற அனைத்தையும், நேரடியாக 80 குடும்பங்களையும் சந்தித்து, வழங்கியுள்ளோம். தீ விபத்து ஏற்பட்ட இடத்தையும் நேரடியாகப் பார்வையிட்டு உடனடியாக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. இது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீ விபத்து ஆகும். இது மிகப் பெரிய தீ விபத்தாக இருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போர்க்கால அடிப்படையில், உடனடியாக அந்த இரவு நேரத்திலும் வழங்கிய உத்தரவின் அடிப்படையில்தான் ஓர் உயிரிழப்புக்கூட ஏற்படாமல் மக்களின் உயிரைப் பாதுகாத்துத் தந்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

(ஆ) மன்னார்குடி நகராட்சி, குப்பைக் கிடங்கினால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேட்டைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள். மாண்புமிகு உறுப்பினர், தகவலை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.*

***திரு. டி.ஆர்.பி. ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு மைக் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மைக் கொடுத்தாயிற்று, பேசுங்கள்.*